உதவி ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத்துறை
திருவண்ணாமலை

இணைப்பு படிவம் 1

# இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி

## (Calender of Events)

மாவட்டத்தின் பெயர். திருவண்ணாமலை

மாதம் – ஜூன் 2017

| வ. எண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தல வரலாறு / அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | Website & email id |
|---|---|---|---|---|---|---|
| 1 | அமி.வேணுகோபாலபார்த்தசாரதி திருக்கோயில், செங்கம் நகர்<br><br>அமைவிடம்<br><br>திருவண்ணாமலையிலிருந்து சுமார் 37 கி.மீ தொலைவிலுள்ள செங்கம் நகரில் இத்தலம் அமைந்துள்ளது.<br><br>திருத்தலச் சிறப்பு<br>மதுரையை ஆட்சி செய்த திருமலை நாயக்கர் மரபில் வந்த தளவாய் என்பவன் செங்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சிற்றரசனாக அரசு செய்தான். அவனது குலதெய்வ கோயிலாக வேணுகோபாலபார்த்தசாரதி பெருமாள் கோயில் விளங்கியது. தினமும் அக்கோயிலுக்குப் பழங்களையும் மணமிக்க மலர்களையும் சமர்ப்பித்து அவன் தியானித்திருப்பான் பெருமாளுக்குப் பலவித அலங்காரங்களைச் செய்து மெய்மறந்திருப்பான். கண்கண்ட தெய்வமாக விளங்கிய அப்பெருமாளின் | 03.06.2017 முதல் 12.06.2017 வரை 10 நாள் கருட உற்சவம் | | திரளான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர். | செயல் அலுவலர், அ.கோ. படைவீடு (கூ.பொ)<br><br>9443477295 | vpperumaltemple.chengam@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திருக்கோயிலினை அர்த்தமண்டபம், மகாமண்டபம் அமைத்து அவன் விரிவு செய்தான்.<br><br>இங்கு கருவறையினுள் ஸ்ரீ வேணுகோபாலபார்த்தசாரதி பெருமாள் தனது தேவியர் பாமா, ருக்மணி சமேதராக நின்ற கோலத்தில் அருள்பாலிக்கின்றார். கருவறைக்கு வெளிப்புறம் சுமார் 10 அடி உயரமுள்ள துவார பாலகர்களின் கற்றிருமேனி காண்போரை வியக்கச் செய்கின்றது. வெளியே பிரகாரத்தில் தாயாருக்கு தனிச்சந்நிதியுள்ளது.<br>இங்குள்ள கல் மண்டபத்தில் பெருமாளின் அவதாரங்கள் கலைநயமிக்க சிற்பங்களாக மிளிர்கின்றன. மண்டப தளத்தின் கீழ் பகுதியில் இராமாயண இராமாயண வரலாற்றுப் படங்கள் பல வண்ணங்களால் காண்போரைக் கவரும் வண்ணம் வரையப்பட்டுள்ளன. | | | | | |
| 2 | அமி.லட்சுமிநரசிம்மசாமி திருக்கோயில்,<br>போளூர் நகர்<br><br>**அமைவிடம்**<br><br>திருவண்ணாமலை – வேலூர் சாலையில் திருவண்ணாமலையிலிருந்து 25 கி.மீ தொலைவிலுள்ள போளூர் நகரின் மையப்பகுதியில் மலைமீது அமைந்துள்ளது.<br><br>**திருத்தல சிறப்பு**<br>பண்டைக் காலத்தில் சம்பத்கிரியின் அடிவாரத்தில் கல் தச்சர்கள் வசித்து வந்தனர். ஒருசமயம் இறைத்திருமேனிக்கான கருங்கல்லைக் கொணர வேண்டி அவர்கள் மலைமீது சென்றனர். அங்கு ஒரு பாறையின் மீது உதிரம் பெருகி வருவதைக் கண்டு | 05.06.2017 முதல் 15.06.2017 வரை வைகாசி பிரம்மோற்சவம், சாமி வீதி உலா மற்றும் தேரோட்டம் நடைபெறும் | | திரளான பக்தர்கள் கலந்துகொள் கின்றனர். | செயல் அலுவலர், அ.கோ. படைவீடு (கூ.பொ)<br><br>9443477295 | renugambal ammanpad aiveedu@g mail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பயந்தோடிக் கீழே இறங்கிவந்து ஊராரிடம் விவரத்தைக் கூற அதனைக் கேட்ட அனைவரும் ஒன்று சேர்ந்து மலைமீது சென்று பார்க்கையில், அங்கு சங்கு சக்கரத்தைத் திருக்கரங்களில் ஏந்திய வண்ணம் இலட்சுமி நரசிம்மரின் உருவில் உதிரப்பெருக்கு தெரிந்தது. அனைவரும் நாராயண நாமஞ்சொல்லி விழுந்து வணங்கினர். ஒரு புண்ணிய காலத்தில் இலட்சுமி நரசிம்மசுவாமியின் திருமேனியை அங்குத் ஸ்தாபித்து கோயில் எழுப்பினர். ஸ்ரீ பெருமாளின் சக்தி எட்டுத்திக்கும் பரவிற்று. பக்தர்களின் வருகையால் நாளும் வழிபாடு அங்கு செழித்தது. இப்பெருமாளை இராமபிரான் வழிபட்டதாகவும் வழங்குகின்றனர். கருவறையில் சுயம்பு உருவமாக இலட்சுமிநரசிம்மர் காட்சியருளுகின்றார். அருகில் சிலாரூபத் திருமேனியும் உள்ளது. கனகவல்லித் தாயார் தனி சன்னதி கொண்டு அருள்புரிகின்றாள். மகா மண்டபத்தில் உட்சுவற்றில் பாகவதபுராண வண்ண ஓவியங்கள் உள்ளன. அருகில் உள்ள நீர்ச்சுனை சந்திர புட்கரணி என்று வழங்கப்படுகிறது. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுக்கள் இங்குள்ளன. | | | | | |
| 3 | அமி. மாரியம்மன் திருக்கோயில், சின்னப்புத்தூர், ஆரணி வட்டம்<br><br>**அமைவிடம்**<br>ஆரணியிலிருந்து 17 கி.மீ தொலைவில் மேற்படி திருக்கோயில் அமைந்துள்ளது.<br><br>**திருத்தல சிறப்பு**<br>பொதுமக்கள் குலதெய்வ வழிபாடு செய்கின்றனர். | 02.06.2017 கூழ்வார்க்கும் திருவிழா | | திரளான பக்தர்கள் கலந்துகொள் கின்றனர். | செயல் அலுவலர், ஆரணி<br><br>9659614736 | tnhrceeo.jageeralayam@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தானிப்பாடி, செங்கம் வட்டம்<br><br>**அமைவிடம்**<br>திருவண்ணாமலையிலிருந்து அரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தண்டராம்பட்டிலிருந்து சுமார் 8 கி.மீ தொலைவில் தானிப்பாடி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது.<br><br>**திருத்தல சிறப்பு**<br><br>கிராமமக்களின் குலதெய்வமாக வழிபாடு செய்கின்றனர். | வைகாசி<br>தேர் திருவிழா<br><br>(ஜூன் மாதம்) | | திரளான பக்தர்கள் கலந்துகொள் கின்றனர் | ஆய்வர், செங்கம்<br><br>9790278538 | 1980sivak@gmail.com |
| 5 | அருள்மிகு கில்லா வரதராஜப்பெருமாள் திருக்கோயில், ஆரணி நகர் மற்றும் வட்டம்<br><br>**அமைவிடம்**<br>ஆரணி நகரின் மையப்பகுதியில் காந்திரோடு– பெரியகடை தெருவில் அமைந்துள்ளது.<br><br>**திருத்தல சிறப்பு**<br>வேலூர் கோட்டையிலிருந்து வரதராஜப்பெருமாள் மூலவர் சிலை கொண்டு வந்து ஆரணி நகரின் மையப்பகுதியில் திருக்கோயில் அமைத்து ஜாகீர் சிற்றரசர்களால் பராமரிக்கப்பட்டு வந்த பழமையான திருக்கோயில். | 26.05.2017 முதல் 05.06.2017 வரை பிரம்மோற்சவம்<br><br>02.06.2017 அன்று தேர் திருவிழா | | திரளான பக்தர்கள் கலந்துகொள் கின்றனர். | செயல் அலுவலர், ஆரணி<br><br>9659614736 | tnhrceeo.jageeralayam@gmail.com |